**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 2011–2012 ஆம் ஆண்டில் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையத்தை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 01–05–2011 முதல் பெரம்பலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் புதியதாக துவக்க அனுமதி வழங்கி – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.10 நாள்: 10–02–2011

தை27, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:-

1. அரசாணை(நிலை) எண். 41, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.2.1)த் துறை, நாள் 13.7.2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கடித ந.க.எண்.3673/ஊ.ம.2–1/2010, நாள் 15.10.2010.

--------

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் 2010–11 ஆம் நிதியாண்டில் 30 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையத்தை தொடர்ந்து நடத்த ஒரு மையத்திற்கு ரூ.5.34 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1,60,20,000/– நிதி ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. அதனை 30 மாவட்டங்களில் உள்ள தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பெறும் ஆரம்பநிலை பயிற்சி மையங்களுக்கும் (ஒரு மையத்திற்கு ரூ.5,34,000/– வீதம்) பகிர்ந்தளித்து ஆணை வழங்கப்பட்டது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில் 23.11.2007முதல் பெரம்பலூர் மாவட்டம் இரண்டாக பிரிக்கப்பட்டு பெரம்பலூர் மற்றும் அரியலூர் மாவட்டங்களாக செயல்பட்டு வருகிறது என்றும் 2008ஆம் ஆண்டு முதல் ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களிலிருந்து, திருப்பூர் மாவட்டம் புதியதாக துவக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது என்றும் ஓசை தொண்டு நிறுவனம் மூலம் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் புதியதாக உருவாக்கப்பட்ட அரியலூர் மாவட்டத்தில் ஏற்கனவே இயங்கி வருகிறது என்றும் கீழ்காணும் காரணங்களை முன்னிட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் புதியதாக மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் துவக்க வேண்டியது அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார்.

(அ) அரியலூர் மாவட்டத்தில் உள்ள இம்மையம் பெரம்பலூர் மாவட்டத்திலிருந்து 90 கி.மீ. தூரத்தில் உள்ளதால் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் சென்று வர மிகவும் சிரமமாக உள்ளது.

(ஆ) ஏற்கனவே, அரியலூரில் இயங்கிவரும் இந்நிறுவனத்தில் அதிகபட்சமாக 50 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் பயன்பெற்று வருகின்றனர்.

(இ) மேலும், பெரம்பலூர் மாவட்டத்தில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு ஆரம்பநிலை பயிற்சி வழங்க ஏதுவாக தகுதி வாய்ந்த நிறுவனங்கள் ஏதும் இல்லையென்பதால் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் அமைக்க அனுமதி கோரி பெரம்பலூர் மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

(ஈ) பெரம்பலூர் மாவட்டத்தில் 0–6 வயதிற்குட்பட்ட 110 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் உள்ளனர்.

3. மேலும் திருப்பூர் மாவட்டத்தில் 50 மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள் கண்டறியப்பட்டுள்ளதாலும் இம்மாவட்டத்திற்கென தனியே ஆரம்பநிலை பயிற்சி மையம் இல்லாததால் மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் துவக்க வேண்டியது அவசியமாகிறது என்றும், பெரம்பலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் ஆரம்பநிலை பயிற்சி மையங்கள் அமைப்பதற்கு ஒரு ஆண்டிற்கான செலவினம் ரூ.15,88,000/–ஆகும் என்றும், மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையம் திட்டத்தினைசெயல்படுத்தும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தெரிவு செய்யவோ அல்லது நீக்கவோ மாநில ஆணையருக்கு அதிகாரம் வழங்கவும் மேற்குறிப்பிட்ட தொகையினை மாநில ஆணையர் பெற்று வழங்க அனுமதித்து, ஆணை வழங்கும்படியும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்த பின்னர், பெரம்பலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் தலா ஒரு மையம் வீதம் புதியதாக இரண்டு மனவளர்ச்சி குன்றியோருக்கான ஆரம்பநிலை பயிற்சி மையங்களை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் 01.05.2011 முதல் ஆரம்பிக்க கீழ்க்கண்டவாறு ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

<u>தொடர் செலவினம்:</u>

| | |
|---|---|
| 5 சிறப்பு பயிற்றுநர் ஊதியம்<br>ரூ.5000/– x 11 மாதங்கள் x 5 | ரூ.2,75,000/– |
| 4 ஆயாக்கள் ஊதியம்<br>ரூ.1000/– x 11 மாதங்கள் x 4 | ரூ. 44,000/– |
| சில்லரைச் செலவினம்<br>ரூ.1000/– x 11 மாதங்கள் | ரூ. 11,000/– |
| சிற்றுண்டி செலவினம்<br>ரூ.10/–x 50 நபர்கள் x 25 நாட்கள் x 11 மாதங்கள் | ரூ.1,37,500/– |
| வாடகை<br>ரூ.2000/– x 11 மாதங்கள் | ரூ. 22,000/– |
| ஆலோசகர் பயணப்படி<br>ரூ.2500/– x 3 நபர்கள் x 2 பயணம் | ரூ. 15,000/– |
| மொத்த தொடர் செலவினம் | ரூ.5,04,500/– |

<u>தொடராச் செலவினம்</u>

ஒரு மையத்திற்கான மொத்த செலவினம் : ரூ.2,45,000/–

தொடர் செலவினம் : ரூ.5,04,500/–
தொடரா செலவினம்: ரூ.2,45,000/–

----------

மொத்தம் ரூ.7,49,500/–

----------

இரண்டு மையங்களுக்கு ஆகும் செலவினம் : ரூ.14,99,000/–
(ரூ.7,49,500/– x 2 )
(ரூபாய் பதினான்கு இலட்சத்து தொன்னூற்றி ஒன்பதாயிரம் மட்டும்)

5. மேலே பத்தி–4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

"2235 சமூகப் பாதுகாப்பும் நலனும் –02. சமூக நலன் – 101 மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II – மாநிலத் திட்டம் MG – மனவளர்ச்சி குன்றியவர்களுக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ் வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி 09–உதவித் தொகை–01–நடப்புச் செலவுக்கான உதவித் தொகை."

(த.தொ.கு. 2235–02–101–MG-0914)

6. மேலும், அரசாணை(நிலை) எண்.223, சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை, நாள் 26.11.2007ல் தெரிவிக்கப்பட்டுள்ள தொடர் மற்றும் தொடராச் செலவினங்களின் அடிப்படையில் இச்செலவினம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் மற்றும் இதற்கான செலவினத்தை 2011–12 ஆம் நிதியாண்டில் உரிய கணக்குத் தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதிக்குள் முதலில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், சேமிப்பு தொகை ஏதும் 2011–12–ஆம் நிதியாண்டில் இல்லாதபட்சத்தில் இத்திட்டத்திற்கு தேவைப்படும் கூடுதல் நிதி 2011–12 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் வழங்கப்படும் என்றும் மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. இக்கூடுதல் நிதி, திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கம் 2011–12 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு ஏதுவாக தேவையான கருத்துருக்களை உரிய நேரத்தில் மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9க்கு தவறாமல் அனுப்புமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி(சந)/4366/11, நாள்28.1.11–ன் ஒத்திசைவுடன் வெளியிடப்படுகிறது.

( ஆளுநரின் ஆணைப்படி)

சோ.சு. ஜவஹர்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–6.
அனைத்து கருவூல அலுவல;ர்கள் / அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் ( மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
தலைமைக் கணக்காயர், சென்னை–18 (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–35.

நகல்:–

நிதித் (சந) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்